ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1947/14 - 2015 දෙසැම්බර් මස 29 වැනි අඟහරුවාදා - 2015.12.29

*1947/14 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 423) கீழான அறிவித்தல்**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7 இன் நியதிகளிலான அனுமதி

1. குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தின் பிரிவு 3 உடன் சேர்த்து வாசிக்கப்படுவதான செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7 இன் கீழ், வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளைப் பராமரிக்கும் இலங்கையில் வதியும் நபர்களுக்கு மேலேயுள்ள கணக்குகளிலுள்ள நிலுவைகளிலிருந்து பின்வருவனவற்றிற்குக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது என இத்தால் அறிவிக்கப்படுகிறது:-

(i) 2015.12. 29 ஆந் திகதியிடப்பட்ட 1947/ 13 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் (அதிவிசேட) பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் மூலம் நிதி அமைச்சரினால் அனுமதியளிக்கப்பட்ட பிணையங்களை கையேற்பதற்கு ; அத்துடன்

(ii) நடைமுறை (மூலதனமல்லாத) பரிமாற்றங்களின் மீதான செலாவணிக் கட்டுப்பாட்டு வரையறைகளின் தளர்த்தல் மீது அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுக்கு வழங்கப்பட்ட EC/ 06/ 94 இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மற்றும் 18.03.1994 ஆந் திகதியிடப்பட்ட EC/ D/GL/ 1994/2 இலக்க வழிகாட்டல்களின்படி நடைமுறைக் கணக்கு கொடுக்கல்வாங்கல்களுக்காக, அல்லது மூலதனப் பண்புகளைக் கொண்ட வேறு ஏதேனும் சொத்துக்களைக் கையேற்பதற்கு.

திருமதி ரி. எம். ஜே. வை. பி. பர்னாந்து,
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
*2015, திசெம்பர் 21.*

*1- 503*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.